2019 ஜூலை 20] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

3. ஐந்து கால்நடை மருந்தகங்கள் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம் 2.50 கோடி ரூபாய் செலவில் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. இரண்டு கால்நடை மருத்துவமனைகள் மற்றும் பெரு மருத்துவமனைகள் தலா 1.20 கோடி ரூபாய் வீதம் 2.40 கோடி ரூபாய் செலவில், 24 மணி நேரமும் இயங்கும் பன்முக மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைத்தல் பற்றிய செய்தி மற்றும் விளம்பரத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் திரையுலகில் மாபெரும் சகாப்தமாக விளங்கிய பழம்பெரும் கதாநாயகர், சிறந்த பாடகர், ரசிகர் பெருமக்களால் எம்.கே.டி. என அன்புடன் அழைக்கப்படுபவர் திரு. கிருஷ்ணசாமி தியாகராஜ பாகவதர் அவர்கள்.

அன்பும், அடக்கமும், எளிமையும் மிகுந்த திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் கலையுலக வாழ்வு 1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்ற திரைப்படத்தின்மூலம் அரங்கேறியது. திரு. தியாகராஜ பாகவதர் அவர்கள் பல்வேறு தமிழ்த் திரைப்படங்களில் நடித்த பெருமைக்குரியவர். இவர் நடித்த ஹரிதாஸ் என்னும் திரைப்படம் மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவர் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரைப்பட உலகில் கோலோச்சிக் கொண்டிருந்த பெருமைக்குரியவர்.

திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் இசைவளம் செறிந்த குரல், அனைத்துத் தரப்பு மக்களாலும் ரசிக்கப்பட்டது. இவருடைய கர்நாடக சங்கீத பாடல்கள் அன்றும், இன்றும் மக்கள் மனதில் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்றால், அது மிகையாகாது. இவர் பல வெற்றிப் படங்களை வழங்கி, தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவர்.

திரைப்படத் துறையிலும், பாரம்பரிய இசைத் துறையிலும் திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் பன்முகப்

பங்களிப்பினையும், சாதனையையும் அங்கீகரிக்கும் வகையிலும், அவரது நினைவினைப் போற்றும் வகையிலும், தமிழ்நாடு அரசு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) உளுந்தூர்பேட்டை திரு. சண்முகம், கவிஞர் நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு உள்ளிட்டோரின் படைப்புகளை நாட்டுடைமையாக்குதல், நவம்பர் 1 ஆம் நாளை 'தமிழ்நாடு நாள்' ஆகக் கொண்டாடுதல், ஓர் இந்திய மற்றும் ஓர் உலக மொழியில் ஆண்டுதோறும் திருக்குறளை மொழியாக்கம் செய்தல், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்விருக்கை நிறுவுதல் உள்ளிட்ட தமிழ் வளர்ச்சித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும், நிதியுதவிகளையும் வழங்கி வந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசும், இதுவரை 149 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத் தொகை வழங்கியுள்ளது. அவ்வரிசையில் இவ்வாண்டு, உளுந்தூர்பேட்டை திரு. சண்முகம், கவிஞர் நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம. கோபால கிருட்டிணன், பாபநாசம் குறள்பித்தன் ஆகியோரின் படைப்புகள் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வகையில் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கென 35 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

2. தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 1—11—1956 ஆம் நாளினைப் பெருமைப்படுத்திடும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் 1 ஆம் நாள் 'தமிழ்நாடு நாள்' என்ற பெயரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.